சுருக்கம்

பள்ளிக்கல்வி – 2019–2020–ஆம் ஆண்டு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 757 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்குதல் – சிறப்பு எழுத்தறிவுத்திட்டம் ரூ.14.60 இலட்சம் செலவில் செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (MS)த் துறை

அரசாணை (நிலை) எண்.183 நாள் 16.10.2019.

திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், புரட்டாசி 29
படிக்கப்பட்டவை:-

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநரின் கடித எண்.587/அ1/2019, நாள் 10.07.2019.

ஆணை:-

2019–2020–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் (பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு) அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

**“தமிழகத்தில் சிறைச் சாலைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கான அரசுத்தேர்வுகள் சிறைச்சாலை வளாகத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. தமிழக அரசின் இச்செயல்பாட்டிற்கு மேலும் மெருகூட்டிடும் வகையில் தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் கண்டறியப்பட்டுள்ள முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 757 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிட, பள்ளிக் கல்வித்துறையின் வாயிலாக சிறப்பு எழுத்தறிவுத்திட்டம் ரூ.14.60 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்”**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் இயக்குநர் 2019–2020–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவு திட்டம் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறை ஆகியவை குறித்து இணைப்பில் கண்டுள்ளபடி விரிவான அறிக்கை அளித்துள்ளார். இத்திட்டத்தின்படி, 757 படிப்பறிவற்ற சிறைவாசிகளுக்கான கற்போர் பதிவு குறித்த செலவினம், கற்பித்தல் கற்றல் செலவினம், கற்போர் அடைவுச் சோதனைச் செலவினம், பயிற்சிகள் சார்ந்த செலவினம், சான்றிதழ் வழங்குதல் சார்ந்த செலவினம் மற்றும் கண்காணிப்பு மற்றும் நிருவாகச் செயல்பாடுகளுக்கான செலவினம் சார்ந்த திட்ட நிதிக் கணக்கீட்டினை தெரிவித்துள்ளார். மேலும், சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை, ரூ.14.60 இலட்சம் செலவில் மாநில அரசின் 100% சதவீத நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்திட ஆணை வழங்கிடுமாறு பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, 2019–2020–ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை செயல்படுத்த, தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் கண்டறியப்பட்டுள்ள முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 757 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்குவதற்கும் இச்சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்திற்காக ரூ.14.60 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள உட்கூறுகளில் மாற்றம் செய்து, ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.14.60 இலட்சத்திற்கு மிகாமல், செலவு செய்ய பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 – பொதுக் கல்வி – 04 – முதியோர் கல்வி – 200 – ஏனைய முதியோர் கல்வித் திட்டங்கள் – மாநிலச் செலவினங்கள் – JP – சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு.2202 04 200 JP 309 03)

5. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2019–2020–ஆம் நிதியாண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளில் ரூ.15 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை மேற்கொள்ள பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.49949 /கல்வி–II/2019, நாள் 11.10.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.
மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை –6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை –6
மாநில கணக்காயர், சென்னை – 18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை –35.
**நகல்**
உள், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வி (வ.செ)த் துறை, சென்னை –9.
நிதி (கல்வி– II/ வ.செ.பொது– I & II)த்துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. கலைச்செல்வி
பிரிவு அலுவலர். 16/10/19
16/10/19

அரசாணை (நிலை) எண்.183, பள்ளிக்கல்வி (MS)த் துறை, நாள் 16.10.2019

இணைப்பு

I. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத்திட்டம்:

தமிழகத்தில் மத்திய, மாவட்ட மற்றும் கிளைச் சிறைச்சாலைகளில் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத படிக்கத் தெரியாதவர்களாக அறியப்பட்டுள்ள 757 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கி, அவர்கள் அனைவரையும் கல்வியறிவு பெற்றவராக மாற்றிடும் வகையில், சிறைத்துறையின் உதவியுடன் பள்ளிக் கல்வித்துறையின் வாயிலாக சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத்திட்டம் ரூ.14.60 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அரசின் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.

II. திட்டம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறை:

அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர், திட்டம் செயல்பட உள்ள சார்ந்த ஒன்றியங்களின் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட வட்டார வளமைய பொறுப்பு மேற்பார்வையாளர், ஆசிரியர் பயிற்றுநர்கள், கல்வித் தன்னார்வ ஆசிரியர்களின் ஒருங்கிணைப்புடன் சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை பின்வரும் களச்செயல்பாடுகளுடன் செயல்படுத்தப்படவேண்டும்.

**(அ) முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாதோரின் விவரங்களை உறுதிசெய்தல்:**

- ❖ சிறைத்துறையின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள, 15 வயதுக்கு மேற்பட்ட கல்லாதோரின் பெயர் மற்றும் விவரங்களை அந்தந்த சிறைச்சாலை நிருவாக உதவியுடன் உறுதிசெய்யப்பட்டு அவர்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**(ஆ) கற்போர் மையங்கள் அமைத்தல்:**

- ❖ சிறைவாசிகளில் கல்லாதோரின் எண்ணிக்கைக்கேற்ப, சார்ந்த சிறை நிருவாகத்தின் உதவியுடன் அந்தந்த சிறை வளாகங்களிலேயே கற்போர் மையங்கள் அமைத்திடப்படவேண்டும்.
- ❖ தற்போது, சிறைச்சாலை வளாகங்களில் சிறைவாசிகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகளுக்காக அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகள் இத்திட்டத்தின் கற்போர் மையங்களாகப் பயன்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
- ❖ அதிக பட்சம் 20 கல்லாதோர் எண்ணிக்கைக்கு ஒரு கற்போர் மையம் என அமைக்கப்படவேண்டும்.
- ❖ இம்மையங்களில், கல்லாதோருக்கு ஏதுவாக காலை அல்லது மாலை ஏதேனும் ஒரு மணி நேரம் மட்டும் அடிப்படை எழுத்தறிவுக் கல்விச் செயல்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**(இ) கல்வி தன்னார்வலர்கள் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்:**

- ❖ கற்போர் மையங்கள் அமைய உள்ள சிறைவளாகத்தில், சார்ந்த சிறை நிருவாகத்தால் கல்விச் செயல்பாடுகளுக்கென பணியமர்த்தப்பட்டுள்ள தன்னார்வலர்களை சிறைத்துறை நிருவாகத்தின் உரிய ஒப்புதல்களுடன் இத்திட்ட தன்னார்வலர்களாக நியமித்து, அவர்களின் வாயிலாகக் கற்போர் மையத்தின் கல்வி சார் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**(ஈ) கல்வி தன்னார்வலர்களுக்கான பயிற்சி மற்றும் கட்டகங்கள் வழங்குதல்:**

- ❖ கற்போர்களுக்கான பயிற்சிக் கட்டகம், முன்தேர்வு மற்றும் பின்தேர்வு வினாத் தாள்கள் தன்னார்வலர்களுக்கான விளக்கக் கையேடு ஆகியன மாநிலக்

கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் தயாரித்து பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தினால் வழங்கப்படவேண்டும்.

- ❖ கற்போர் மைய கல்வி தன்னார்வலர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்விச் செயல்பாடுகளுக்கான கற்போர் கட்டகம் (Learner - Primer) மற்றும் இதர பயிற்சிகளானது மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் திட்டமிடப்பட்டு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் வாயிலாக நடத்தப்படவேண்டும்.

**(உ) கற்போர்களுக்கான சான்றிதழ்கள் வழங்குதல்:**

- ❖ பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தினால் கற்போர்களுக்கு அடிப்படைக் கல்விச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

**(ஊ) கற்போர் மையச் செயல்பாடுகள் சார்ந்த குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| 1 | மையம் செயல்படும் இடம் | அந்தந்த சிறைச் சாலை வளாகம் (சிறைச் சாலை நிருவாக ஒப்புதலுடன்) |
| 2 | நேரம் | கற்போர்களுக்கேதுவாக காலை அல்லது மாலை ஏதேனும் ஒரு மணி நேரம் மட்டும் |
| 3 | ஒரு மையத்திற்கு கற்போர் எண்ணிக்கை | அதிக பட்சம் : 20 |
| 4 | மைய பயிற்சியாளர் | கற்போர் மையங்கள் அமைய உள்ள சிறைவளாகத்தில், சார்ந்த சிறை நிருவாகத்தால் கல்விச் செயல்பாடுகளுக்கென பணியமர்த்தப்பட்டுள்ள தன்னார்வலர்கள் |
| 5 | மைய பொறுப்பு | அந்தந்த சிறை நிருவாகம் |
| 6 | மைய கண்காணிப்பாளர்கள் | மையம் சார்ந்த சிறை நிருவாகம், வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வளமைய பொறுப்பு மேற்பார்வையாளர்கள் |

**(எ) திட்டம் கண்காணிப்பு :**

<u>மாநில அளவில்:</u>

- ➢ பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் மற்றும் சிறைத்துறை.

<u>மாவட்ட அளவில்:</u>

- ➢ சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டச் செயல்பாடுகள் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையின் கீழ், அந்தந்த மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட உதவித் திட்ட அலுவலரின் ஒருங்கிணைப்புடன் கண்காணிக்கப்பட வேண்டும்.

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

ப. கலைச்செல்வி
பிரிவு அலுவலர் 16/10/19
16/10/19